1974 ஏப்ரல் 17]

Industrial Units at Ambattur

* 844 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether small Industrial Units at Ambattur have faced shut down due to power crisis during April 1973; and

(b) the total number of employees affected in this connection?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) 1973-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் அம்பத்தூர் தொழிற்பேட்டையிலுள்ள சிறுதொழில் நிறுவனங்கள் மின்சார தட்டுப்பாடு காரணமாக முழுவதுமாக மூடப்படவில்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

(முற்பகல் 9-30)

திரு. எம். சுரேந்திரன் : மின்சார வெட்டு இப்போது வருடா வருடம் வருகிற ஒரு பிரச்னையாக மாறிவிட்டது. ஆகவே இந்த மின்சார வெட்டு காரணமாக சிறு தொழில்கள், சிறு வியாபாரிகள், சிறு அளவில் இருக்கிறவர்கள் எல்லாம் பாதிக்கப்படாமல் தடுப்பதற்கு ஒரு புதிய திட்டம் வகுப்பது பற்றி அரசு ஏதாவது யோசனை செய்கிறதா? அப்படி, பெரும் தொழிற்சாலைகளுக்கு அளிக்கிற மின்சாரத்தை சில நாட்கள் நிறுத்திவைத்து மற்றவர்கள் எல்லோருக்கும் கிடைக்கும்படியான ஒரு ஏற்பாட்டினைச் செய்து, அந்தப் பெரும் தொழிற்சாலைகளில் வேலை செய்கிறவர்களுக்கு காம்பன்சேஷன் தருவதற்கு இந்த மின்சாரம் பெறுகிறவர்களிடத்தில் ஏதாவது ஒரு தொகையை அதிகமாகப் பெற்று அவர்களுக்கு காம்பன்சேஷன் தருவதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்படி ஒரு யோசனை கூறப்படுகிறது. அதற்கு மாற்று யோசனையாக அந்தப் பெரும் தொழில்களில் உற்பத்தியாகிற மூலப்பொருள்கள் இல்லாவிட்டால் சிறுதொழில்கள் கவனிக்கப்பட முடியாமல் போய்விடும் என்ற ஆட்சேபனையும் இருக்கிறது. ஆகவே இதற்கெல்லாம் பரிகாரம் அதிகமான மின்சார உற்பத்திதான்.

திரு. கே. என். குமாரசாமி : தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அந்தத் தொழிலாளர்களுக்கு, மின்சார வெட்டு காரணமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு, சிறு தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு ஏதாவது நஷ்டயீடு வழங்கப்பட்டதா அல்லது அதனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு வேறு ஏதாவது முறையில் நிவாரணம் கொடுக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான், பாதிக்கப்பட்டதாகச் சொல்லவில்லை.

New Industries

* 845 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the State Branch of the National Alliance of Young Entrepreneurs has sought the co-operation of the Government in starting new industries in this State; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) மாநிலப்பிரிவு, தொழில் முனைவர்களின் "நேஷனல் அல்லையன்ஸ்" நிறுவனத்தின் மூலமாக புதிய தொழில்கள் துவக்க வேண்டுமென்று சுமார் இருபது தொழில் முனைவர்கள் தமிழக அரசினை அணுகினர். அங்ஙனம் ஆரம்பித்த தொழில்களுள், ஆறு தொழிற்சாலைகள் தங்களின் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன

திரு. கே. என். குமாரசாமி : சர்க்கார் தீர்மானிக்கிற தொழில் பட்டியலில், கிட்டத்தட்ட இருநூற்றுச் சில்லறை சிறு தொழில்கள் அந்தப் பட்டியலில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்த இருநூற்றுச் சில்லறை தொழில்களில் பெரும்பாலும் அத்தியாவசியப் பொருள்கள் உற்பத்தி செய்யும் தொழில்களாக இல்லை. எனவே அத்தியாவசியப் பொருள்களை—உணவு, கைத்தறி போன்றவைகளை—உண்டாக்குகிற தொழில்களையும் இந்த பட்டியலில் சேர்த்து அவற்றின் உற்பத்தியைப் பெருக்க அரசாங்கம் ஆவன செய்யுமா ?